Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 1058/2025 |
| Police station | : | Pew-panruti |
| Deposition of witness for Prosecution | : | LW2 / PW1 |
| Name | : | திரு. பிரேம்நாத் தலைமை காவலர் 936 |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 14.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.நடைமுறை சட்டம் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது கடலோர காவல் படை பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025 ம் தேதி மாலை 14.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நானும் தலைமை காவலர் காவலர் திரு. வீரய்யன் 876 என்பவரும் நத்தப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில் மது விலக்கு சம்பந்தமாக கண்காணிப்பில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது ஆஜரில்லாத எதிரி கையில் ஒரு பாலிதின் பையை வைத்துக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை நாங்கள் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் சசிகுமார் த/பெ. அருள் என்றும் கூறினார். அவரை சோதனை

செய்தபோது தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட 500 ML அளவு கொண்ட கோரியர் நெப்போலியன் பிராந்தி 4 எண்ணிக்கையும் மற்றும் 375 ML அளவு கொண்ட நியான்ஓட்கா பிராந்தி 1 எண்ணிக்கையும் வைத்திருந்தார். அதை வைத்திருப்பதற்கு அவரிடம் எவ்வித அரசு அனுமதியோ, ஆவணமோ இல்லை. அவர் விற்பனைக்காக வைத்திருப்பதாக சந்தேகத்தின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அவரை காரணம் கூறி பகல் 14.40 மணிக்கு கைது செய்தார். அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் மேற்படி மது பாட்டில்களை ஒரு கைப்பற்றுதல் மகசர்மூலம் 15.00 மணியளவில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் அ.ச.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் ஆஜராகி எதிரி மீது நிலைய குற்ற எண். 08/2025 ல் சட்டப் பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), TNP Amendment Act 2024ன் படி வழக்கு பதிவு செய்து உரிய நடைமுறைக்கு பின் உரிய நிலைய பிணையில் விடுவித்தார். இது சம்பந்தமாக என்னையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு தான் செல்வோம் என்றால் சரிதான். சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் விசாரித்து சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அப்போது பொதுமக்கள் யாரும் இல்லை. எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பாலிதின் பையை கைப்பற்றினோமா என்றால் கைப்பற்றினோம். அதை கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 5வது காலத்தில் யாரிடமிருந்து எங்கே இருந்து கைப்பற்றப்பட்டது என்ற இடத்தில்

சசிகுமார் சஞ்சீவிராயபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மகசர் தயார் செய்த இடம் நத்தப்பட்டு பஸ் ஸ்டாம் அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் காவல் நிலை யபுள்ளி விபர கணக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.